RECEIVED
1980-6-30
PERIODICALS DIVISION
UNIVERSITY LIBRARY CAMPUS

பக்கங்கள் 8

ஈழநாடு
EELANAADU

50 சதம்

வரி 22 | ஆனி 16 | ஷகீபா 16 | இதழ் 141
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 30 6 80

★ மைந்தனின்மறைவுகுறித்து அன்னையின்இரங்கலுரை:

"சஞ்சயின் பணிகளை நிறைவு செய்வோம்!"

இந்திராகாந்தி அறைகூவல்

காவிய நாயகனாக உயர்த்த முயற்சி நடக்கிறது என்று சரண்சிங்கட்சி கண்டனம்!

(புதுடில்லி)

விமான விபத்தில் பலியான சஞ்சய்காந்தியின் அகால மரணத்தினால் தமக்கு ஏற்பட்ட பேரிழப்புக்குறித்து பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று முதற்தடவையாக கருத்து வெளியிட்டுள்ள அதே நேரத்தில், சஞ்சய்காந்தியின் மறைவுக்கு கொடுக்கப்பட்டு வரும் அரசு முக்கியத்துவம் குறித்து, முன்னாள் பிரதமர் திரு. சரண்சிங் தலைமையிலான லோக்தள் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சஞ்சய்காந்தியின் மறைவைத் தொடர்ந்து நேற்று சஞ்சய்காந்தியின் அஸ்தியும் பாரதப் பிரதமரான திருமதி இந்திராகாந்தியின் இல்லத்தில் நாற்பத்தெட்டு மணிநேர மதவைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் திருமதி இந்திராகாந்தியின் குடும்பத்தினரும் மற்றும் மத்திய மாநில அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து திருமதி இந்திராகாந்தி அஞ்சலி செலுத்தினார்.

நாட்டுக்கு மணி செய்தார்

"சஞ்சய் காந்தி, தாய் நாட்டுக்குச் சேவைசெய்வதையே பெரும் கடமையாக் கருதி அப்படியே செயல்பட்டார். எனக்கு இன்னல்கள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம், எனக்கு வலுவூட்டும் சக்தியாக சஞ்சய் விளங்கினார். சஞ்சய் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றுவதுதான் அவருக்கு செலுத்தும் சிறந்த புகழஞ்சலியாகும்" என்று கூறிய திருமதி இந்திராகாந்தி;

"எனக்கும் எனதுகுடும்பத்துக்கும் நாட்டு மக்கள் காட்டிய அன்பு பாசத்துக்கு, வெறும் வார்த்தைகளால் நன்றிதெரிவிக்க முடியாது" என்றும் தெரிவித்தார்.

திரு. சஞ்சய்காந்திமறைந்து சில தினங்களின் பின்னர் நேற்றுத்தான் முதற்தடவையாக திருமதி இந்திரா மேற்படி கருத்து வெளியிட்டார்.

லோக்தள் கண்டனம்

முன்னாள் பிரதமர் திரு. சரண்சிங் தலைமையிலான லோக்தள் கட்சியின் நிர்வாகசபை நேற்று புதுடில்லியில் கூடி, சஞ்சய் காந்தியின் மறைவுக்கு அரசாங்கம் அளித்து வரும் முக்கியத்துவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

"இந்திரா காந்தியின் குடும்பத்தை அரச குடும்பத்திற்கு நிகராகக் கணித்தால் அதனை நாடு சகிக்கமாட்டாது. சஞ்சய் காந்தியை ஒரு காவிய நாயகனாக உயர்த்த மத்திய, மாநில அரசுகள் திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றன. சஞ்சயின் மரணச் சடங்குகள், வழமைக்கும்மாறாக பட்டாடையும் ஆரவாரத்துடன் நடைபெற்றிருக்கிறது. சஞ்சய் பிரதமரின் மகனாக இருக்கலாம். ஆனால் அவரை ஒரு தேசிய நாயகனாகக் கொள்ள முடியாது. அவருக்கு அதிகமாக அரசாங்கம் சஞ்சய்க்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதனை நாடு சகிக்காது" என்று 'லோக்தள்' கட்சியின் நிர்வாகசபை இயற்றிய தீர்மானம் கண்டிக்கிறது.

எல்லையில் பலியான

இளைஞர்களின் சடலம் யாழ்ப்பாணம் வந்தது

(யாழ்ப்பாணம்)

ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தானுக்கு எல்லையைக் கடந்துசெல்ல எத்தனித்த பொது ஆப்கான் எல்லைக் காவற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இளைஞர்களின் சடலங்களும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவர்களுடைய சடலங்களை நேற்றுக்காலை அரசாங்க அதிகாரிகள் உறவினர்களிடம் ஒப்படைத்தனர். கொழும்பிலிருந்து வந்த பாகிஸ்தானிய கொழும்பு வந்தடைந்த இச் சடலங்கள் தாமதமின்றி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி

(8-ம் பக்கம் பார்க்க)

நாளை சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நாளை நல்லை ஆதீனகர்த்தர் தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பிரம்மஸ்ரீ சுவப்பிரமண்ய சிவாசாரியார் "நாம் தமிழர் மரபு பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இந்த நிகழ்ச்சிக்கு நல்லை ஆதீன சங்கத்தலைவர் திரு. வி. கனகரத்தினம் தலைமை வகிப்பார். நல்லை ஞானசம்பந்த ஆதீனமுதல்வர் ஆசியுரை வழங்குவார். (8-ம்)

"ஐக்கியமும் கட்டுப்பாடும் எமக்கு மிகமுக்கியம்"

-'அமிர்'

(யாழ்ப்பாணம்)

"தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கமாகும். எமக்கு ஐக்கியமும், கட்டுப்பாடும் மிக முக்கியமானது".

இவ்வாறு நேற்றுக் காலை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டார்.

யாழ். மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் செயற்குழு உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், பொதுச்சபை அங்கத்தவர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழர் விடுதலைக் தலைமைச் செயலகத்தில் ஊர்காவற்துறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது.

கூட்டணிச் செயலாளர், நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில் பேசுகையில் கூட்டணியின் முக்கியமான, தொகுதிக்கிளைச் சீரமைப்பு முறையில் இயங்கு

[8-ம் பக்கம் பார்க்க]

பரீத் நஸீர்

இருபது விஷப்பாம்புகளுடன் 105 மணி சாதனை முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனாப் பரீத் நஸீர், இருபது பாம்புகளுடன் எண்ணுடிப் பெட்டிக்குள் 105 மணித்தியாலங்கள் இருந்து, மற்றொரு புதிய சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் ஜூன் மாதம் 6ம் திகதி காலை 6 மணிக்கு ஜனாப் பரீத் நஸீர் பாம்புகளுடன் எண்ணுடிப் பெட்டிக்குள் இருக்கும் முயற்சியை ஆரம்பிப்பார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் இம் முயற்சியை ஆரம்பித்து வைப்பார்.

ஜனாப் பரீத் நஸீர் இந்த

[8-ம் பக்கம் பார்க்க]

ரியூட்டரி மாணவி

கமலா கொலைவழக்கு: இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

பொலிஸ்கண்டி ரியூட்டரி மாணவி கமலா கொலை வழக்கு, பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் 80ம் ஆண்டு மார்ச் 21ம் தேதி பொலிஸ் கண்டி ரியூட்டரி மாணவி கமலா கொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஆனையிறவுத்தான் மயானத்திலிருந்து சடலமாகக் கொலை செய்ததாகவும், 5619 ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்ததாகவும்; ராஜன் அல்லது ராஜ்குமார், லோகியன் பொன்னுடேவா ஆகியோர் மீது குற்றச் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீராமச்சந்திரனும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணிகள் ஆர். தவராசா, ஆர். சிறிவேலாயுதம் ஆகியோர் ஆஜராவார்கள். பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணி எஸ். சோமசுந்தரம் ஆஜராவார்.

பொலிஸ் நிலையங்களில்

மக்களுக்குக் கிடைக்கும் 'மரியாதை' நிலைமை மாறவேண்டும் என்கிறார் பொலிஸ் அதிபர்

(யாழ்ப்பாணம்)

"பொலிஸ் நிலையங்களுக்கு முறையிடச் செல்லும் பொதுமக்களை, பொலிசார் நல்ல முறையில் வரவேற்பதில்லை. இதன்காரணமாக பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லவே அஞ்சுகின்றார்கள்"

பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவுக்கு முன்னுராரப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. தனபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அன்னாரார்ப்பணக் கூட்டம் நேற்றுக்காலை யாழ் பொலிஸ் நிலைய மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் யாழ் மாநகர முதல்வர் திரு. நி. இராஜலிங்கநாதன், மாநாகரசபை உறுப்பினர்கள் ஜனாப். ஆர். எம். இமாம், திரு. எஸ். (8-ம் பக்கம் பார்க்க)

வண்ணார்பண்ணை ஸ்ரீ ஞானவைரவர் மணவாளகோல விழா

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கட்கிழமை காலை வண்ணார்பண்ணை நல்லதண்ணீர்க் கிணறடி ஸ்ரீ ஞானவைரவர் "மணவாளகோலமிக்கும்" பரிவார மூர்த்தி ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கும் காலை 10 மணி தொடக்கம் அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவை யொட்டி "வைரவமூர்த்தியின் தத்துவங்களும் சிறப்புகளும்" என்ற விடயம்பற்றிய சிறப்புக் கட்டுரையை 3-ம் பக்கம் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி விளம்பரம்

பயிற்சி

8 மாத டிப்லோமா கோட்டார் மெக்கானிக் டீசல் மெக்கானிக் மோட்டார் மெக்கானிக் பயிற்சிகள் 10-07-1980 ல் ஆரம்பமாகின்றன. Institute of Engineering Technology 9/1, Stanley Read, Jaffna 6163

விற்பனைக்கு

இக்கொழும்பில் பாவிக்கப்பட்ட டீசல் மொறிஸ் LD5 வான்கள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 62,000/- 37, நல்லூர் பிளேஸ், சுன்னாகம், போன்: 6171, இண்டாவிட்ரக் கொம்பனி, 395 காலி வீதி, கொழும்புப்பட்டி. போன்: 37697 [6167]

வகுப்புகள்

Motor Mechanism Petrol & Diesel [English and Tamil Medium] Welding [Gas and Electrical] ஆகியவற்றிற்கான வகுப்புகள் ஆரம்பம் 1-7-1980 குறிப்பிட்ட ஒரு இடங்களில் உள்ளன. முன் கட்டியே பதிவு செய்யவும் விபரங்கட்கு நேரில். திரு வாசு, Patrician Industrial Institute, 59, St. Patrick's Road, Jaffna. 6175

விளம்பரம்

மண்டதத்தரிப்பு இராமாட்சி மன்றம் நடுக்கட்டும் உத்தியோகத்தர் பதவிகள் (2)

கிழக்கானும் தலைமையுடைய மேற்படி மிகுந்த மண்டதத்தரிப்பு இராமாட்சி மன்றவிசேட ஆணையாளரால் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 09-07-80-ந் திகதி அல்லது அதற்கு முன்னரே கிடைக்க வேண்டும்.

1. வயது: 35 வயதுக்கு மேற்பட்டோர்.

2. கல்வித்தகைமை: 8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்டதுமாகும்.

3. ஊதியம்: அறவிடும் வரித்தொகையில் 12% கமிஷன்

4. மாதா ரொக்கம் ரூபா 500/-.

மேலும் விபரங்களுக்கு மண்டதத்தரிப்பு இராமாட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அணுகவும்.

கி. கோமாலரத்தினம்
விசேட ஆணையாளர்
மண்டதத்தரிப்பு இ. சபை.

24-06-1980.

6174

ஐவருக்கு தைரயல் மெஷின்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் [illegible] அபிவிருத்தி [illegible] தெரிவுசெய்யப்பட்ட ஐ [illegible] மன்னார் [illegible] வழங்கப்பட்டது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. [illegible] மெஷின் வழங்கி [illegible] உரையாற்றிய [illegible] "[illegible] கொண்டு கொழில் [illegible] வாழ்க்கையில் முன்னேறுங்கள்" என்று கூறினார்.

"விடுதலைப் பயணம் முன்னேறுவதற்கு

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை துறக்கவேண்டுமானால் அதற்கும் தயார்"

கூட்டணிக் கருத்தரங்கில் 'அமிர்'

(மாவிட்டபுரம்)

"சமுதாயமும் மக்களது விடுதலையும் தமிழ் ஈழமே முடிந்த முடிபு என்று தீர்மானித்த நாளது ஆகுமாகில் தமிழ் ஈழ விடுதலைப்பயணம் சரியான அளவு முன்னேறியுள்ளது இதை எவரும் மறுக்க முடியாது."

இவ்வாறு காங்கேசந்துறையாழ். தொகுதியில் காங்கேசன்துறை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கிற் பேசிய எதிர்க்கட்சித் முதலாவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

[சமிட்டத்தரணி க. குமாரகுரு தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

"இன்றைய அரசியல் நிலையில் நாம் என்னும் தனிப்பிரிவு. அமிர்தலிங்கமும் தொடர்ந்து பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை துறப்பதன் மூலம் இனத்தின் விடுதலையை முன்னேற்றிச்செல்ல முடியுமானால் அதையும் செய்ய நாம் தயங்மாட்டோம் என்றும் தமிழ் நம்பிக்கையில்லை என்று கருவோர் தமது பொறுப்புக்களை வாபஸ்வாங்கி ஏதேனும் முன்னரும் பட்சத்தில் அதற்கு ஒப்பமிடக் நாம் தயாராயுள்ளோமாகவும் கூறினார்.

மேலும் பேசும்போது அவர் கூறியதாவது:

இலங்கையின் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது தமிழும் தமிழரும் ஒரு நாடமிடையே ஒற்றுமையில்லாத நிலையில் பலவீனமுற்றிருந்ததால் அறிய முடிகிறது 1815 ல் தமிழரான சேர் பொன். இராமநாதனை சிங்களவர்கள் கூட தலைவராக ஏற்றிருந்தனர். ஆனால் பின்னர் எமது தலைவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மை சிங்கள மக்களுக்கு கொண்டாட்டமாகப் போய்விட்டது. இதிலே முழுவதையும் உணர்ந்ததால் 72 ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்கீழ் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து நின்றனர்.

இந்தநாட்டில் தமிழ்பேசும் மக்களது விடுதலைக்கு தமிழ் ஈழம்தான் முடிந்த முடிபு என தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவுசெய்து 4 ஆண்டு கள்தான்சென்றுள்ளன. தமிழ் மக்களது உரிமைப்போராட்டம் இலக்கை விடுதலை இயக்கமாக மாறிய பின் கணிசமான அளவு முன்னேற்றம் இந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்டிருப்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

விரும்பிக் கேட்டதல்ல

எதிர்க்கட்சித் தலைவர் பதவி நான் விரும்பி கேட்டதல்ல. இதை பெறவேண்டுமென்ற பதவி ஆசையும் எனக்கு இருக்கவில்லை. அப் பதவிமூலம் இனவிடுதலைக்கு உதவமுடியும் என்ற நம்பிக்கையினாலே நான் ஏற்றேன். இதற்படி சமதேச சர்வரப் பலம் திரட்டிவந்துள்ளதையும் யாவரும் அறிவர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் துறப்பதன் மூலம் விடுதலைப்பயணத்தை முன்னேற்றச் செல்ல முடியுமானால் அதனைச் செய்யவும் நான் தயங்மாட்டேன்.

தியாகத்தில் ஊடுருவல்

[illegible] எமது [illegible] பல [illegible] ஊடுருவல் செய்துள்ளன. [illegible] கொண்டு [illegible] இயக்கத்திற்கு வளர்க்கிறார்கள். [illegible] "[illegible] வாழ்க்கையில் முன்னேறுங்கள்" என்று கூறினார்.

கோப்பை மிகுவோர் வாரகை இருந்தாலும் அவர்களை இயக்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டியது தவிர்க்க முடியாதது. கோவை மகேசன், சமுதேந்தன் போன்றோர் [illegible] வளர்ப்பதில் முன்னிற்கிறவர்கள். அவர்கள் இயக்கத்தில் பயிர்களாகத் தான் இருந்தார்கள், களைகளாக அல்ல. இருந்தாலும் பயிர்களுக்கு நோய் வந்துவிட்டது. நோய்க்கு பயிர்களை வளரவிடாமல் ஏனைய பயிர்களுக்கும் பரவலாம். ஆகவே தான் அவர்களை நீக்கவேண்டியேற்பட்டது.

இலட்சிய பயணம்

தமிழகத்தில் எவரையும் நாம் ஒதுக்கிவைக்க விரும்பவில்லை. எல்லோரது ஒத்துழைப்பையும் பெற்றுதான் எமது இலட்சிய பயணத்தை கொண்டுசெல்ல விரும்புகிறோம். ஆனால் மேடைப்பேச்சால் மட்டும் இலட்சியத்தை அடைந்துவிடலாம் என நினைப்பவர்கள் இயக்கத்தை வளர்ப்பதற்குப்பதிலாக இயக்கத்தின் கட்டுக்கோப்பை குலைப்பவர்களாக இருக்கிறார்கள். பதிரிகைகளும் அவர்களது செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் மக்கள் குழம்பமடைகிறார்கள். இதில் குழப்பமடைய எதுவுமில்லையென்பதை மக்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

உதாரணம் காட்டினால் மட்டும் போதாது

உலக அரங்கில் பல கட்டுக்கோப்பான புரட்சிகள் நடப்பதை உதாரணம் காட்டினால் மட்டும்போதாது. எமது குழ்நிலையையும் அறியவேண்டும். பயமறியா விடுதலைப் புரட்சியில் அவசரப்பட்டு தமது சக்தியை அறியாது ஈடுபட்ட புரட்சியாளர்கள் பட்ட கஷ்டங்களை நாம் அறிவோம். மாற்றுப் பலம், சொந்தப் பலம் என்பவற்றை எடைபோட்டு விடுதலையியக்கத்தை நடத்திச்செல்ல வேண்டும் என்றே விடயங்களையும் எல்லோருக்கும் சொல்லி ஓர் இயக்கத்தை வளர்ப்பதென்பது முடிவான காரியம்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள்

மாவட்ட அபிவிருத்திச்சபை பற்றி பெரிதாகப் பேசப்படுகிறது. இதுகுறித்து கோவை மகேசன், சமுதேந்தன் ஆகியோருடன் மட்டுமல்லாமல் பல இளைஞர்களுடன் கடைத்தரையாடினோம். இளைஞர்களையும் புறக்கணிக்கக் கூடாதென்பதற்காகவே அழைக்கப்பட்ட ஆலோசிக்கப்பட்டோம். ஆனால் ஆலோசனைகளும் எதிர்க்கோள்களும் பட்டன மாவட்ட அபிவிருத்திச்சபை இளைஞர் கட்சி உருப்பெறவே அல்லது செயற்படவோ ஆரம்பிக்கப்படவில்லை இருக்கும்போது அது பற்றிய விபரங்களைத் தேவையில்லை. அதுபற்றி கட்டணி கொழும்பில் இருந்து வருகிறது தேவையான நேரங்களில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன்.

தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பு எந்த விதத்திலும் உள்ளது என்றே தெரியவில்லை. ஆனால் அறிக்கைகள் பத்திரிகைகளில் வந்திருக்கவேண்டியவை வந்துகொண்டிருக்கின்றன. இளைஞர் பேரவையில் உள்ளவர்கள் வெளியே நிற்கிறார்கள். பல புதியவர்கள் உள்ளே வந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களது அறிக்கைகளில் மக்கள் குழப்பமடைகிறார்கள். இயக்கமாக கொண்டு நடத்துவதற்கு 'கப்டன்' ஒருவரது தலைமையில் என்னாது கப்டன் கொண்டு நடாமல் அதே போன்று கட்டணித்தலைமையின் கீழ் மக்கள் நிற்க வேண்டும்.

கட்டத்தரணி க. குமாரகுரு பேசுகையில் கூறியதாவது:-

கோவை மகேசன், சமுதேந்தன் போன்றோர் இலட்சியம் பற்றி உள்ளவர்களே. ஆனால் அவர்கள் முன்னேறுவதற்கு தடைகளாக காங்கேசந்துறையை குழ்ந்திருக்கக் கூடிய வெளியிடப்படுவோர் விரைவு போராட்டம் என்கிறார்கள். அது கட்டி எனக்கூறுகிறார்களில்லை. எமது சமுதாயத்தை தேற்றவழியைக் கண்டுபிடிக்க நாம் விடுதலைப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும்."

வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர் திரு. ச. ஞானமூர்த்தியும் பேசினார். (க)

இளைப்பாறிய அதிபருக்கு மாணவர்கள் பாராட்டு

(ஊர்காவற்துறை)

"அதிபர் ஆற்றிய பணிகளை மொழிகளை விழா எடுத்து நாம் மட்டும் போதாது அவர் ஆற்றிய பணிகளை நாம் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறு ஆகும்."

இவ்வாறு ஊர்காவற்துறை மகா வித்தியாலய அதிபராக இருந்து இளைப்பாறிய திரு. இக்கியம்பலம் தட்டாரசாமி சேவை நலன் பாராட்டு விழாவில் உரையாற்றிய உப அதிபர் திருமதி பாலைப்பிரமணியம் கூறினார்.

பாடசாலை வாரிய மாணவர் மன்றத்தினால் நடாத்தப்பட்ட இவ்விழா ஆரம்பத்தில் அதிபர் பிரதான வீதியிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

புதிய அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியர் திரு. கே. பாக்கியநாதன் பேசுகையில் கூறியதாவது:

"யாராதிபரை எமக்கு வழங்கத்தந்த வழி முறைகளை

(7-ம் பக்கம் பார்க்க)

வீதி சீர்கேடு

[பரிசிப்பகுதி]

கடந்த மழைக்காலத்தில் பொது முத்துவரையுள்ள வெள்ளத்தில் முழுவிருந்த மருதடிவேளி-ஆழியவளை வீதி இரண்டாம் கிலோமீட்டர் தொடக்கம் நான்காம் கிலோமீட்டர் வரையுள்ள இடங்கள் இன்னும் திருத்தப்படவில்லை. தற்போது இவ்வீதி குண்டும் குழியுமாகவே காட்சியளிக்கிறது. பல போக்குவரத்து நடைபெறும் இவ்வீதி இவ்வாறு சீர்கேடடைந்து இருப்பதினால் போக்குவரத்துக் கேடுமான சீர்கேடடைந்துள்ளது. (க)

சந்தர்ப்பத்தை நழுவ விட்டவர்களுக்கு

விசேட சலுகை

இலவசம் FREE இலவசம்

திறமான ஸ்ரேடியம் தலைக்கவசம்
(Stadium Helmet)

கன்ரேபியா மோட்டர்ஸ் (Cantabia Motors)

ஸ்தாபனத்தார்

புத்தம் புதிய ஹொன்டா (HONDA) மோட்டார்சைக்கிள்களுக்கு தங்களுடன் ஒர்டர் பதிவு செய்துகொண்டவர்களுக்கு அல்லது விலைக்கு வாங்குபவர்களுக்கு ஒவ்வொரு சைக்கிள்களுக்கும் ஒவ்வொரு திறமான ஸ்ரேடியம் தலைக்கவசம் (Stadium Helmet)

இலவசமாக இம்மாதம் வரை கொடுக்கப்பட்டிருந்த இந்த அரிய சலுகையை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி 1980 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி வரை நீடித்துள்ளார்கள்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை மீண்டும் நழுவ விடாதீர்கள்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

கன்ரேபியா மோட்டர்ஸ்
(CANTABIA MOTORS)

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 8201

AUTHORISED DEALERS OF:

STAFFORD MOTOR Co Ltd

COLOMBO 10. 6173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எவரன் அல்லது குடிமகன் மெய்வருத்தப் பணியும் துன்னமறுப்பும் இன்றியமையாதவை.
— வாமிசிவானந்தர்

மக்கள் கருத்து

கொடிகாமம்-கச்சாய் வீதி திருத்த வேலை

கொடிகாமத்தில் உள்ள கச்சாய் வீதி பல மாதங்களாகத் திருத்தப்படாது போக்குவரத்துக்குக் கஷ்டமான நிலையிலிருந்து தற்போது பொதுவேலைத் திணைக்களத்தின் உதவியுடன் திருத்தப்பட்டு வருகின்றது. இதற்கு கச்சாய் வாசியாகிய நாம் நன்றியுடையவர்களாக உள்ளோம். ஆனால் இவ்வீதிக்குச் சரியான முறையில் கல்லுப்போடப்பட்டு உருளைமூலம் அவை இறுக்கப்படவில்லை. இதனால் பள்ளங்களுக்குப் போடப்பட்ட கற்கள் மேலே பிதுங்கி காணப் படுகின்றன. அதுமட்டுமல்லாது தார் ஊற்றப்பட்டபின் அதற்குமேல் ஜல்லி மண் தான் போடப்படுவது வழக்கம். ஆனால் அதற்கெல்லாம் நாற்றங்கால் வயல்களிலிருந்து போக்குவரத்துக்குப் பாவிக்கப்படும் இவ்வீதிக்கு உடைந்த போத்தல் ஓடுகள், ஒட்டுத் துண்டுகள், செங்கல் வைத்து வாய்க்கால் மண் போடப்பட்டுள்ளது. இது பாதசாரிகளுக்கு இடையூறாக இருப்பதுடன் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார்வாகனங்களின் செப்பனிடுவோருக்குச் சேதாரத்தையும் உண்டுபண்ணுவதாக உள்ளது. இவற்றை நோக்கும்போது திருத்தவேலை செய்யமுன்பாக்க செய்யாமலிருந்து கவ்வளவோ மேல் என்று தோன்றுகின்றது. ஆகவே தயவு செய்து இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் பார்வையிட்டு உடன் தடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆ. அனுராஜ்

வேதக்கோவிலடி,
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

கூட்டுறவு தினவிழா

(உடுப்பிட்டி)

கட்டைவேலி - தெல்லிப்பழை பன் நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் சர்வதேச கூட்டுறவு தினவிழா அதிதி மாசி 30 ம் திகதி தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு எடுத்த மாதம் 5 ம் திகதி முதல் இச்சங்கக் கிளைகளில் கூட்டுறவுக் கொடிகள் ஏற்றி வைக்கப்படவுள்ளன. அத்தடன் அன்றையதினம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன.

அதற்கு மறுநாள் 12 ம் திகதி பாடசாலை மாணவர்கள், சங்க ஊழியர்கள் ஆகியோருக்கும், 13 ம் திகதி சங்க கிளைகளை உறுப்பினர்களுக்கும் கட்டுரை மற்றும் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன.

20 ம் திகதி மாதர் ஒட்டப் போட்டி, நாடகப் போட்டி எக்பஸனை ஆகியன நடைபெற்ற கூட்டுறவுதின விழாவும் இடம்பெறும். [ச]

வைரவ மூர்த்தத்தின் தத்துவங்களும் சிறப்புகளும்

-- ஐ. கைலாசநாதக்குருக்கள் --

[ஆனித் திங்கள் பதினாறு நாளான இன்று திங்கட்கிழமை ஸ்ரீ ஞான வைரவசுவாமிக்கும், ஸ்ரீ வைரமூர்த்தியான ஸ்ரீ விக்னேஸ்வரருக்கும், ஸ்ரீ முருகப் பெருமானுக்கும் காலை 10 மணி தொடக்கம் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ் விழாவையொட்டி நவீன நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானப் பிரதம குருவாகிய அமரர் பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஸ்ரீ வைரவ மூர்த்தத்தின் தத்துவங்களும் சிறப்புகளும் என்னும் விடயம் பற்றி மேற்படி கோவிலில் 16-9-77 ம் நடைபெற்ற ஸ்ரீ முருகப்பெருமானின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவன்று நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது. உதவியவர்: செ. இரத்தினசபாபதி]

ஸ்ரீவைரவப் பெருமானது உண்மைத் தத்துவம் என்ன வென்பதைச் சைவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். உலகில் முழுமுதற் கடவுளாகிய சிவனையும், எவ்வுயிர்க்கும் தந்தையாகிய முருகனது மூர்த்தத் தத்துவத்தையும் அறிந்து கொண்டுள்ள சைவர்கள் வைரவ சுவாமியின் மூர்த்தத்தின் தத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும். வேறும், வைரவ சுவாமிக்கும் எத்தகைய வேறுபாடுகளும் இல்லை என்பதற்கு வைரவ சுவாமியின் தோற்றமே நமக்கெடுத்துக்காட்டாக அமைகிறது.

வைரவர் பற்றிய தோற்றங்களிலும், நாம் சொல்லுகின்ற தியானங்களிலும் அவரது தோற்றம் எவ்வகையில் அமைந்துள்ளன என்பதை நாம் பார்க்கும்போது வேறுபாடு, வைரவருக்கும் எந்த விதமான வேறுபாடுகளும் இல்லை என்பதற்கு வைரவ சுவாமியின் தோற்றமே நமக்கெடுத்துக்காட்டாக அமைகிறது.

வைரவர் பற்றிய தோற்றங்களிலும், நாம் சொல்லுகின்ற தியானங்களிலும் அவரது தோற்றம் எவ்வகையில் அமைந்துள்ளன என்பதை நாம் பார்க்கும்போது வேறுபாடு, வைரவருக்கும் எந்த விதமான வேறுபாடுகளும் இல்லை என்பதற்கு வைரவ சுவாமியின் தோற்றமே நமக்கெடுத்துக்காட்டாக அமைகிறது.

வைரவ சுவாமியின் சடா பாரமானது இரத்தமாக ஜொலிக்கின்ற ஜுவாலையாகக் காட்சியளிக்கின்றது. இதைப் போலவே உலகில் அழிக்கும் தொழிலைச் செய்கின்ற இருஷ்டிகர்த்தாவாகக் கொண்டுள்ள வைரவப் பெருமானது சடாமுடியும் தீச்சுவாலையாகவே தோற்றமளிக்கின்றது. எனவேதான் சொல்லுகின்றோம் முழுமுதற் கடவுளாகிய சிவனையே அட்சரூபமாகவும் இருந்து ஆன்மாக்களின் ஆன்மாவதாக விளங்கி ஆன்மாக்களின் ஆன்மாவாகவும் வைரவ சுவாமியின் தோற்றமாகவும் ஆன்மாவின் ஆன்ம மலத்தினால் மயங்கும் அந்த ஒழியிற் நீங்கி திருந்தவேண்டி மெய்ஞானமாகவே தான் வைரவ சுவாமியின் வடிவாகி வைத்திருக்கிறார். இன்னுமொரு வகையிலே உடுக்கையை வைத்திருப்பதை நாம் காண்கிறோம். இந்த உடுக்கையானது ஒரு கழுவில் இரு பக்கங்களிலும் கட்டி தலை எழுப்புவதையும் நாம் அறிகிறோம் எனவே இந்த உடுக்கை மூலம் தாளத்தை உண்டு பண்ணி உலகத் தோற்றத்தை அறிவுறுத்தவே உடுக்கையைக் காத்திக் வைத்திருக்கிறார். இந்த உடுக்கையிலே மேல் வாய் கறையொன்றும் உண்டு. இறைவன் உடுக்கையின் நாதத்தை உண்டுபண்ணி பிரபஞ்ச முயல்வுக்குச் காரணமாகிய சக்தியிலிருந்து இலக்கணத்தைச் செம்மையிலே கொடுத்தாரென்றும் வடமொழியிலே இலக்கியமாகிய சிவபுராணத்தை தமிழ் இலக்கணம் செறிவிலே கொடுத்தாரென்றும் சொல்லப்படுகிறது.

உலகிலுள்ள ஆன்மாக்கள் அவை தாம்தாம் செய்த பாவபுண்ணியங்களின்படி அவற்றிற்கு சேட்சதையும் நாசத்தையும் அனுபவிக்க விடுக்க வரத்திருக்கிறார். வைரவப் பெருமான் அவரது நீண்டகால லீலைகள் அவர் விருப்பு வெறுப்புக்களுக்கமைய உரிய நற்பலன்கள் வரப்பெறுவதாக அமைகிறது. அவரது வாகனமான நாயினது நாண்கு வேதங்களையும் நாயகத்தை வசப்படுத்தித் தன்கீழ் வைத்திருக்கிறார்.

உலகில் உள்ள இயக்கங்களை யெல்லாம் அடக்கி வைத்திருக்கின்ற வைரவசுவாமி இந்த உலகினையும் தான் செய்கிறார் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் ஆகிய ஐந்து மூர்த்திகளும் ஐந்து தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தலாகிய தொழில்களைச் செய்கிறபோது வைரவப் பெருமான் இவ்வைந்து தொழில்களையும் தாமே தனித்து நின்று நடத்துகிறார். இதனால் வருகின்ற பெருக்கும் பரோபகாரமாகவே இவரை நாம் நாளாந்தம் தரிசித்தால் நாம்செய்த செய்கின்ற பாவங்கள் தொலையும்

வைரப் பெருமானுக்குரிய செவ்வாய்க்கிழமை பரணி நட்சத்திரத்தன்றும் நாம் வைரவர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது நம் வாழ்வில் சந்தோஷத்திற்கும் எழுச்சிக்கும் காரணமாகும்.

'ஸ்ரெதஸ்கோப்' பாவித்த முதலாவது தமிழ்வைத்தியர்

[குழந்தைகளின் இரட்சகர் அமரர் டாக்டர் கே. சி. சண்முகரெத்தினம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது].

இரத்த ஓட்டத்தை அறியும் கருவியையும், ஸ்ரெதஸ் கோப்பையும், பாவித்த பட்டதாரியான முதலாவது தமிழ் வைத்தியர் டாக்டர் கே. சி. சண்முகரெத்தினம் அவர்களே.

'ரத்தினம்' என்று நண்பர்களாலும் உறவினர்களாலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த டாக்டர், குழந்தைகள் வைத்தியத்தில் வாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி முழு இலங்கையிலுமே புகழ்பெற்றிருந்தார்.

வாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலுள்ள நல்லதண்ணீர் கிணற்றடியில் வசித்து வந்த வந்தப்பிள்ளை வைத்தியரின் வழித்தோன்றல் டாக்டர் சண்முகரெத்தினம் அவர்கள் தம்மிடம் கிட்டவரும் எந்த வர்களிடம் பெரும்பாலானவர்களுக்கு இலவசமாகவேயிருந்து வளித்துவந்தார். வந்தப்பிள்ளை வைத்தியரின் பரம்பரை பரம்பரையாக வைத்தியத்தையும் பரவலாக்கியதையும் படிப்பித்த இவரைப் பட்டதாரி ஆக்கினார்.

இலங்கையில் பிரிட்டிஷ்காரர் ஆட்சி செலுத்தி வந்த போது அவர்களின் ஆட்சிக் கெதிராக சதிசெய்ததாக டாக்டர் என். எம். பெரேரா வையும், கொல்வின் ஆர். டி. சில்வாவையும் பிரிட்டிஷ் அரசு கைதுசெய்தபோது அவர்கள் இருவரும் கைதியிலிருந்தாப்பி போடி இந்தியா சென்றனர். அப்போது இந்தியாவிலிருக்கும் மாணவருக்கு இந்த சண்முகரெத்தினம் அவர்கள் இருவருக்கும் பாதுகாப்பளித்து சிறப்பாக பணிஉதவியளித்துவிட்டார்.

அரசியல் துறையில் தேறுவாக வந்து கொள்ளவிரும்பாமலும் இடதுசாரிக்கொள்கையிலிருந்த ஒருவராகவே இருந்துவந்தார்.

ஓய்வாகிவிட்டிருந்து தாமாகப்பட்டியல் ஒழுக்கத்துக் கொண்டு வாழ்ப்பணம் திரும்பியதும் சிகிச்சைகளிலீடுபடுதலை வேண்டிய சில ஒழுங்குகளையும் செய்து நவீன முறையில் [7-ம் பக்கம் பார்க்க]

ஒரே ஆசிரியருடன் நடைபெறும் பாடசாலை

(பரந்தன்பள்ளி)

பருத்தித்துறை கிழக்கிலுள்ள பொக்கறுப்பு ஆரினர் தமிழ் கலவன் பாடசாலையில், ஐந்தாம் வகுப்புவரை வகுப்புக்கு ஒரு இருந்தபோதிலும் ஒரு ஆசிரியர்மட்டுமே கடமையாற்றிவருகிறார்.

அத்துடன் இப்பாடசாலையில் கட்டிடக் கட்டத்த மழை வரத்தொடங்கும்போது இடிந்து விழுந்து விட்டதினால் தற்போது வகுப்புகள் மர நிழலிலே நடத்தப்பட்டுவருகின்றன.

இப்பாடசாலைக்கென அமைக்கப்பட்டுவரும் கட்டடமோ கூரை மூர்த்தியடையாததினால் மாணவர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் மழையிலே நனையவும் பெரும்பாடுபடுகின்றனர்.

[illegible]

எஸ். ஆர். கனகநாயகம்

(சட்டத்தரணி)

[illegible] பரவலாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தவைத்திய ஏடுகளையும், வைத்தியமுறைகளையும் முறையாகப் பாதிந்து வைத்தியத்துறையில் சிறந்த விளங்கிய [illegible], பொதுவாழ்விலும் தம்மை அர்ப்பணித்தார்.

[illegible] ஆனந்தாக்கல் ஹாரிஸன்கல்லூரி மற்று அரச எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்தார். சொழும்பில் 'சாமில் ஒஃ சிலோன்' நிறுவனத்தில் நிர்வாகப்பொறுப்பை ஏற்று நிறுவனத்தை நல்ல நிலையில் ஆக்கிய நிரு. தங்கராஜாஅவர்கள் [illegible] சோதரராகவந்தித்த இந்தியாவுக்கனுப்பி சென்னையிலும் பம்பாயிலும் ஆனந்தாக்கல் ஹாரிஸன்கல்லூரி மற்று அரச எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்தார். சொழும்பில் 'சாமில் ஒஃ சிலோன்' நிறுவனத்தில் நிர்வாகப்பொறுப்பை ஏற்று நிறுவனத்தை நல்ல நிலையில் ஆக்கிய நிரு. தங்கராஜாஅவர்கள் [illegible] சோதரராகவந்தித்த இந்தியாவுக்கனுப்பி சென்னையிலும் பம்பாயிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

கிளிநொச்சியே சிறந்த மாணவனை உருவாக்கியது!

தொகுதி எம். பி. பெருமிதம்

[பத்திரிகையிலிருந்து]

கிளிநொச்சித் தொகுதியில் துள்ள பாடசாலைகளும் மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றபோதிலும் அவற்றினை எல்லாம் முறியடித்து யாழ் மாவட்டத்தில் இருந்து அண்மையில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த மாணவன் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள மிகவும் கஷ்டப் பிரதேசமான பூநகரியிலேயிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளான் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி பண்டாரிகுளம் மகாவித்தியாலயத்தில், வித்தியாரம்ப விழா நிகழ்த்தி திரு. எ. பி. செல்லையா தலைமையில் நடைபெற்ற வருடாந்த இல்லங்களுக்கிடையேயான பேச்சுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது: கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியைக் கற்று நிறைமாணவனாக வளர்ந்து க. பொ. த சாதாரண வகுப்புவரையில் மிகவும் நிறைவான முறையில் சித்தியடைகின்ற மாணவர்கள் உயர் வகுப்புகளில் கல்வி கற்பிப்பதற்காக நகரப் புறத்திலுள்ள பாடசாலைகளில் சேர்ந்து கல்வி கற்க நகரப்புற பாடசாலைகளுக்கே பெருமையைத் தேடிக் கொடுக்கிறார்கள். இவ்வருடம் யாழ் மாவட்ட சிறந்த மாணவனாகப் பூநகரியிலிருந்தெரிவு செய்யப்பட்ட மாணவனின் திறமைக்கு எதிர்காலத்தில் கிடைக்கப் போகின்றபெரும் பதவியும் நகரப்புற பாடசாலை ஒன்றுக்கே கிடைக்கப் போகின்றது. பெற்றோர்களும் மாணவர்களும் கிளிநொச்சித் தொகுதிப் பாடசாலைகள் பெருமைபடக் கூடியவகையில் மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுகம் எடுக்கும்வரை இப்பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்பிக்க முன் வரவேண்டும்.

கிளிநொச்சித் தொகுதியில் முதலாவது பட்டதாரியை மகாவித்தியாலயம் உருவாக்கித் தருவதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

பொறியியலாளர் எனோ இன்று உடனடியாகத் தேவையில்லை முதலில் கல்விப் பட்டதாரி ஆசிரியர்கள் உருவாக்கப்படவேண்டும். அவர்களின் மூலம் எனது தொகுதியிலுள்ள ஆசிரியர் பெற்றிடக் கூடிய நிரப்பப்படாமலே. கிளிநொச்சித் தொகுதிக்கு 850 ஆசிரியர்கள் தேவை. இவற்றில் 550 இடங்கள் இன்றுவரையிலாவதுவிடவை எனது தொகுதிக்கு ஆசிரியர்கள் சேவை காற்றவர பிரிவாகிவிடுகிறார்கள். எனது தொகுதிக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியினைக் கொண்டு ஆசிரியர்களை நியமிக்கும் உரிமையினை அரசாங்கம் எனக்குத் தருமேயானால் ஒதுக்கப்படுகின்ற நிதி முழுவதினையும் ஆசிரியர்களை நியமிக்கவே பயன்படுத்துவேன். எனது தொகுதியில் வாழ்கின்ற மக்கள் ஏழைப் பாட்டாளி மக்கள் அவர்களின் உணர்வுகளை கடந்த இருபது வருடங்களாக நான் உணர்ந்துள்ளேன். கிளிநொச்சித் தொகுதி நிலவ கல்வியில் முன்னேற்றமே என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பாடசாலைகளில் பட்டிப் பதிருக்குறை கிடையாது பல்லாயப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இரைவாகிக்கு மேல் பாடசாலைகளில் கட்டிட வசதிகளுக்கு ஒதுக்கவுமுமே இப்பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாவைச் செலவழித்த பிறகு மேலும் பணம் ஒதுக்கித்தர நான் ஆயத்தமாகவுள்ளேன்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு திருமதி ஆனந்தசங்கரி பரிசில்களை வழங்கினார். சம்பவ இல்லம் முதலாமிடத்தையும், இளங்கோ இல்லம் இரண்டாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றது. திரு. காராத்தினம் ஆசிரியர் நன்றியுரை கூறினார்.

'விலைமதிக்கமுடியாதது கல்விச் செல்வம் தான்'

அமைச்சர் 'இராசு' உரை

[மட்டுநகர்]

கல்வி ஒருநாட்டின் விலைமதிக்க முடியாத சொத்தாகும் எனும் புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய இல்லங்களாட்டு போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மட்டுநகர் முதலமைச்சர் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ஒரு நாட்டின் விலைமதிக்கமுடியாத சொத்து தங்கமோ, நவரத்தினங்களோ, முத்துக்களோ, வைரத்தினங்களோ, மலையான வயிரங்களோ, எண்ணெய்களோ அல்ல. கல்வித் செல்வம்தான் விலைமதிக்க முடியாத சொத்தாகும். இந்த கல்வியை மாணவர் பருவத்தில் வாழ்க்கையில் கற்று பயன் பெறவேண்டும். நிறைய கற்கவேண்டும். கற்றவிட்டால் நிலத்தில் விழுந்த எண்ணெய்க்கு சமம்.

இன்றைய மாணவர் சேவை நாட்டிற்கு தேவை. அவர்கள் எதிர்பார்க்கின்றது. இம்மண் எதிர்பார்க்கின்றது. இந்நாடு நாளை உலகில் முழுமனிதனாக வாழவேண்டும் என்று கூறியதுபோல் சற்றுமுன் கல்வியை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றார்.

பிரசவமனைக்கு மின்சாரம்

[மட்டுநகர்]

மட்டுநகர் முதலமைச்சரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை, சுகாதாரஅமைச்சர் திரு. காமினி ஜாகுரிய விடம் தொடர்புகொண்டதன் பிரகாரம் மட்டக்களப்பு தொகுதியில் அமைந்துள்ள மண்டபத்தடி பிரசவமனைக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீடுகளை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றார்கள். [கு]

பிரியாவிடை வைபவம்

[மட்டுநகர்]

மட்டக்களப்பு கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சி கல்லூரி அதிபர் திரு. எ. தாமிலிங்கம் வாஜிபியாவிற்கு சங்கமாகுண்டு பிரியாவிடைவைபவம் நடைபெற்றது.

புனரமைப்பு வேலை துரிதம்

[மட்டுநகர்]

கடந்த புயலினால் பலத்த சேதத்திற்குள்ளான மட்டக்களப்பு முனைத்துவாரத்தில் அமைந்துள்ள மீன்பிடி பயிற்சி கல்லூரி புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

சம்பத்திரிசியார் அறிவாலய சுடர்விளக்குகளுக்கு விழா

யாழ்ப்பாணத்தின் பழம் பெருமை மிக்க அறிவாலய மான சம். பத்திரியார் கல்லூரி இன்று விழாக்கோலம் பூண்டு நிற்கின்றது. கடந்த கால் நூற்றாண்டுகளாக இருளகற்றி அறிவொளி பரப்பும் பணியில் தம்மை அர்ப்பணித்து சம். பத்திரியார் கல்லூரி எனும் அறிவுலகக் குத்துவிளக்கில் ஐந்து சுடர்களாகத் தம்மை எரித்து ஒளிபரப்பிய நிருபகளான சம் அல்பிரெட், டீ. எஸ். ஞானப்பிரகாசம், ப. சோரன்ஸ், டபிள்யூ. ஜே. பி ஞானரெட்னம், ஜி. அருளானந்தம் எனும் ஐந்து ஆசிரியர்களுக்கு இன்று சம். பத்திரியார் கல்லூரி நன்றி விழாக் காண்கின்றது. நன்றி நிகழ்வு, சேவைநலன் பாராட்டு, மகிழ்ச்சி விழா எனப் பலவகை நிகழ்ச்சிகள் அமைந்து இந்த நன்றிவிழா எடுத்துக்காட்டுகிறது. மாணவ சமுதாயம் எழுந்து நிமிர்ந்தவன் இறைவன் எனும் பழம்பெருவரலாற்றை மனம் எண்ணி எல்லாம் சிறந்திடும் மனிதர்களாக நடமாடவைத்த இச்சிற்பிகளுக்கு பாதபூசையாக மாணவர்கள் விழாவெடுக்கின்றனர்.

இன்று இலங்கை விஞ்ஞான உலகிலே "சாம்" எனும் பெயரை அறியாதவர்களே இல்லையெனலாம். இரசாயனத்திற்கோர் "சாம்" எனும் அளவுக்கு இந்த சாம்அல்பிரெட் ஒரு தலைசிறந்த இரசாயன ஆசிரியராகத் திகழ்கின்றார். கணிதம் என்று சொன்னதுமே "கொறன்ஸ் மாஸ்டர்" எனும் அளவுக்கு கணித மேதையாகத் திகழ் வர் திரு ப. சோரன்ஸ். அமைதியின் உருவமானவர் அவர் வாய்திறந்து பேசவது அபூர்வம். பேசினால் பிறப்பது சிந்தனைப் பொறிகள் மாணவர்கள் இதயங்களிலே அவரது சிந்தனைப் பொறிகள் காலமெல்லாம் நிலைத்திருந்து நிறைவான மனிதனாக அவர்களை வாழவைக்கும் சக்தி படைத்தவை.

பௌதிகம், பிரயோக கணிதம் இரண்டும் விஞ்ஞானத் துறையின் முக்கிய பிரிவுகள். இவற்றிலே எழுவி சத்தேமுமின்றி மாணவர்களை கற்றுத்தேற அரும்பணியாற்றி வருபவர் திரு டீ. எஸ் ஞானப் பிரகாசம் ஆவார். இவர் விஞ்ஞானத்தைக் கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடாது மாணவர் மனதிலே சமுதாய உணர்வைத் தூண்டும் சக்தியாகவும் திகழ்வர். சிறந்த சமூக சேவையாளரான இவர் தமிழ்ப்பற்று மிக்க ஒருவர்.

இக்காலத்தில் சிறந்த உச்சரிப்பும், சிறந்த போதனை வன்மையும் மிக்க ஆங்கில ஆசிரியராகத் திகழும் ஒரே ஒரு ஆங்கில ஆசிரியர்களில் திரு டபிள்யூ. ஜே பி ஞானரெட்னமும் ஒருவர். ஆங்கிலத்தோடு உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகளிலும் இவர் திகழ்கிறார். யாருடைய மனமும் நோகாது நடக்கும் ஆசிரியர் இவர். 49ம் ஆண்டுக்காலம் முதலே இவர் சம்பத்திரிசியார் கல்லூரியில் எழுச்சிக்காக உழைத்து வருகிறார்.

மனித வாழ்க்கையில் விஞ்ஞானம் எழுச்சியை ஊட்டினாலும் அதனுடன் சமுதாய அறிவை வளப்படுத்தவும் கலை, பூமிசாஸ்திரம், சரித்திரம், குடியியல் போன்ற சமூகக் கல்விகளைக் கற்பிப்பதில் கைதேர்ந்தவர் திரு ஜி. அருளானந்தம் ஆவார். பண்பும், பயனும் இணையப்பெற்ற இவர் மாணவர்களுக்கு வழிகாட்டும் ஒரு கலங்கரைவிளக்கமாக 51ம் ஆண்டிலிருந்து திகழ்ந்துவருகிறார்.

--பற்றிமாகரன்

'விலைமதிக்கமுடியாதது கல்விச் செல்வம் தான்'

அமைச்சர் 'இராசு' உரை

[மட்டுநகர்]

கல்வி ஒருநாட்டின் விலைமதிக்க முடியாத சொத்தாகும் எனும் புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய இல்லங்களாட்டு போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மட்டுநகர் முதலமைச்சரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ஒரு நாட்டின் விலைமதிக்கமுடியாத சொத்து தங்கமோ, நவரத்தினங்களோ, முத்துக்களோ, வைரத்தினங்களோ, மலையான வயிரங்களோ, எண்ணெய்களோ அல்ல. கல்வித் செல்வம்தான் விலைமதிக்க முடியாத சொத்தாகும் இந்த கல்வியை மாணவர் பருவத்தில் வாழ்க்கையில் கற்று பயன் பெறவேண்டும். நிறைய கற்கவேண்டும். கற்றவிட்டால் நிலத்தில் விழுந்த எண்ணெய்க்கு சமம்.

இன்றைய மாணவர் சேவை நாட்டிற்கு தேவை. அவர்கள் எதிர்பார்க்கின்றது. இம்மண் எதிர்பார்க்கின்றது. இந்நாடு நாளை உலகில் முழுமனிதனாக வாழவேண்டும் என்று கூறியதுபோல் சற்றுமுன் கல்வியை சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றார்.

பிரியாவிடை வைபவம்

[மட்டுநகர்]

மட்டக்களப்பு கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சி கல்லூரி அதிபர் திரு. எ. தாமிலிங்கம் வாஜிபியாவிற்கு சங்கமாகுண்டு பிரியாவிடைவைபவம் நடைபெற்றது.

புனரமைப்பு வேலை துரிதம்

[மட்டுநகர்]

கடந்த புயலினால் பலத்த சேதத்திற்குள்ளான மட்டக்களப்பு முனைத்துவாரத்தில் அமைந்துள்ள மீன்பிடி பயிற்சி கல்லூரி புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்தில்

32 கிராம சேவைஅலுவலர் பிரிவுகள் அதிகரிப்பு

(சித்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள பதினொரு தொகுதிகளிலும் மூப்பத்திரண்டு கிராமசேவை அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன,

வலிகாமவடக்குத் தொகுதியில் நான்கு கிராமசேவையாளர் பிரிவும், வட்டுக்கோட்டைத் தொகுதியில் இரண்டு கிராமசேவையாளர் பிரிவும், யாழ்ப்பாணத் தொகுதியில் ஒரு கிராமசேவையாளர் பிரிவும், நல்லூர் தொகுதியில் இரண்டு கிராமசேவையாளர் பிரிவும், காங்கேசந்துறை தொகுதியில் மூன்று கிராமசேவையாளர் பிரிவும், மானிப்பாய்த் தொகுதியில் மூன்று கிராமசேவையாளர் பிரிவும், கோப்பாய்த் தொகுதியில் மூன்று கிராமசேவையாளர் பிரிவும், சாவகச்சேரித் தொகுதியில் நான்கு கிராமசேவையாளர் பிரிவும், உடுப்பிட்டித் தொகுதியில் ஒரு கிராமசேவையாளர் பிரிவும், பருத்தித்துறைத் தொகுதியில் நான்கு கிராமசேவையாளர் பிரிவும், கிளிநொச்சித் தொகுதியில் ஐந்து கிராமசேவையாளர் பிரிவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை தொகுதி

மெற்றிவு வடக்கு கேணி தெற்கு புங்குடுதீவு தெற்கு நாரந்தனை வடக்கு

வட்டுக்கோட்டை தொகுதி

காரைநகர் தெற்கு வட்டுக்கோட்டை தெற்கு

யாழ்ப்பாணம் தொகுதி

நாவாந்துறை

நல்லூர் தொகுதி

நல்லூர் மேற்கு திருநெல்வேலி

காங்கேசன்துறை தொகுதி

பெரியவிளான் மேற்கு தெல்லிப்பழை மேற்கு பலாலி

மானிப்பாய் தொகுதி

மாவிட்டபுரம் உடுவில் வடக்கு சுன்னாகம் தெற்கு

கோப்பாய் தொகுதி

வண்ணார் 'அ'வரகாக் கிழக்கு

சாவகச்சேரி தொகுதி

கரம்பன் நுணாவில் மேற்கு கிழவாரை எழுதுமட்டுவாள் வடக்கு

உடுப்பிட்டி தொகுதி

தங்கூசி மேற்கு

பருத்தித்துறை தொகுதி

பருத்தித்துறை தெற்கு, தொண்டைமானாறு தெற்கு, வல்லிபுரம் வேணி

கிளிநொச்சி தொகுதி

இரணைமடு தெற்கு, கிளிநொச்சி, பூநகரி, 'மயிலவிட்' மடுவிநாகு மேற்கு, சிறாஞ்சி

வேறுபாடின்றி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிதாயமும் எனக் கூறிக் கொள்ள முடியாதெனக்கூறி அச்சம்பவத்திடம் உயர்ந்த நோக்கம் எதுவும் கிடையாது சத்திரனுக்கு மனிதன் சென்றுள்ள இந்த சம்பவத்திலே எந்த நாட்டிலுள்ள பிரஜைகளென்றாலும் சரி பரந்த நோக்கமுள்ளவராக இருக்க வேண்டுமே தவிர இனவாத வந்துள்ளவராக இருக்க கூடாது.

வடக்கு கிழக்கிலுள்ள வந்தேறுகுடிகளில், பலர் உண்மையான மனிதர்கள் எங்கள் சம்பந்தித் சேர்ந்தவர்கள். எங்கள் சகோதரர்கள் நாடெங்கும் விரவிக்கிடக்கிறார்கள் என்பதையும் இன்று சாதி பிரதேச வேறுபாடின்றி சகல அதிகாரங்களுக்கும் சேவை செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் உணர்ந்து [கு]

கிளிநொச்சி சென் திரேசாவுக்கு 4 ஏக்கர் காணி

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி சென் திரேசா மகளிர் மகாவித்தியாலயத்திற்கு நிரந்தரக் கட்டிடம் அமைப்பதற்கு 4 ஏக்கர் முடிக்குரிய காணி வழங்கப்பட்டுள்ளது.

இக்காணியை வழங்குமாறு காணி ஆணைக்குழு மேற்படி கல்லூரி அதிபர் - ஆசிரியர் சங்கமும்; கல்லூரி அதிபர் அருட்சகோதரி 10 ஆண்டுகளாக வற்புறுத்திவந்திருந்தனர். [கெ]

தலைவராகத் தெரிவு

[பிரதேசம்]

தொப்புகாலு முருகன் வித்தியாலயத்தின் தொழிலாளர் சங்கத் தலைவராக திரு. செ. விரபத்திரன் தெரிவுசெய்யப்பட்டார். [கு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நற்பிரஜைகளை உருவாக்க கல்விவள நிலையங்கள் உதவும்"

— வடமாநில வித்தியாதிபதி

[புலோலி]

இலங்கையிலுள்ள வளர்முக நாடுகள் எல்லாவற்றிலும் பொருளாதாரம், கல்வி துறைகளில் துரித வளர்ச்சியடைந்து வருகின்றன. இவ்வளர்ச்சிகளுக்கு நேர்ப் குரியர்களும் நாடு அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். மாணவர்கள் கல்விமட்டும், வட்டுப்போடு, ஒழுக்கம் பொருந்தியவர்களாக செயற்பட வேண்டும் இயற்கை நிறைந்த நாட்டுக்கு வளமிகு மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவல்லிய பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும். மாணவர் தலைவர்கள், பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் அவர்களுக்கு ஒரு கௌரவம் கொடுப்பதும், மதிப்புக்கொடுப்பதும் தவறக்கூடாது

இவ்வாறு வடமாநில கல்வி பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், பருத்தித்துறைத் தொகுதிக்கான கல்விவள ஆய்வு நிலையத்தைத் தம்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயவளாகத்தில் நிறுவுவதற்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிறுவுதிறப்பு வைபவம் பருத்தித்துறை வட்டாரக் கல்விப்பணிமனை திரு. எஸ். துரைச்சாமி தலைமையில்நடைபெற்றது. தொடர்ந்து பேசிய திரு. மாணிக்கவாசகர் குறிப்பிட்டதாவது: முற்காலங்களில் மாணவர்கள் ஆசிரியர்களைத் தெய்வமாக மதித்துப்போற்றி வந்தனர். ஆனால் இன்றைய நிலையில் ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்கின்றனரா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கின்றது. இதற்கு எமது சமுதாயத்தின் சாபக்கேடான சாதிக்குறைபாடுகளும் காரணமாக இருப்பதாகத் தென்படுகின்றது. இத்தலையங்குறைபாடுகளை ஒழித்துக்கொண்டு கல்விகற்பிக்கவேண்டும்.

நற்பொதுத கல்விமுறையில் அதிபர்கள், ஆசிரியர்கள் தமது கடமைகளைச் சிறப்பான முறையில் மேற்கொண்டுவருகின்றனர். ஆனால் எதிர்காலத்தில் இந்நிலைக்கு என்ன நேருமோ என்பது தெரியவில்லை. சிறந்த சமுதாய அமைப்பை நாட்டில் ஏற்படுத்துவதில் அதிபர்கள், ஆசிரியர்களிடம்தான் இருக்கின்றது. வாழ்க்கையில் வாக்கிற்கும் செயலிற்கும் தொடர்புகொடுக்க வேண்டும். கற்றிலையிலேதான் சிறப்பான வாழ்க்கையை நடாத்தமுடியும். மாணவர் சமுதாயத்தில் நற்பொதுபண்புகளை உருவாகி உள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இந்நிலை அரசியலிலும் ஏற்பட்டதில் ஒருசில விஷமிகள் தமது சுயநலத்திற்காக இந்நிலையை உருவாக்கியுள்ளனர். மாணவர்கள் பாடசாலைகளில் ஆதிக்கம் செலுத்த முயலக்கூடாது

எமது சமுதாயத்தில் சில பிழைகள் இருக்கின்றன. இப்பிழைகளை ஆராய்ந்து கண்டுபிடித்து ஒப்பிழைகளைத் திருத்தி நேர்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு முறையான கல்வி புகட்டப்படவேண்டுமென்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும் மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் வெளியுலக அறிவையும் பெற்றுக் கொள்ளத்தவறக்கூடாது

எதிர்காலத்தில் சிறந்த அறிவைக் கொண்ட நற்பிரஜைகள் உருவாக வேண்டுமெனபதற்காகவே கல்விவள நிலையங்களை அரசாங்கம் ஆரம்பித்துவருகின்றது. யாழ் மாவட்டத்தில் இக்கல்விவள ஆய்வுத்திட்டம் கல்வித்துறையில் புரட்சி நிகழ்த்தத ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இக்கல்வி வள நிலையங்களை மேலும் விரிவாக்கத் திட்டங்கள் இடப்பட்டுவருகின்றன.

யாழ். பிரதம கல்விபதிகாரியும், யாழ் மாவட்ட மூவலை கல்வி ஆய்வு மதிப்பீட்டு பொறுப்பதிகாரியுமான ஜனாமகிழ் உரையாற்றுகையில் கூறியதாவது: சகல மாணவர்களும் சமமாக கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் கல்விவளர்ச்சி மூலவள ஆய்வு நிலையங்களை அமைத்து வருகின்றது. இக்கல்வி வளர்ச்சியிலே ஆய்வு நிலையங்கள் மூலம் 9ம் 10ம் குடும்பத் தொடர்பாக 18ம் வகுப்புவரை பிள்ளைகளுக்கு கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் கற்பிக்கப்படுகின்றனர்.

பருத்தித்துறை வலயக்கல்விப்பிரிவு திரு. எஸ். துரைச்சாமி மூலவளநிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் திரு. பி. பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். அதிபர் திரு. எஸ். கிருஷ்ணகுமார் நன்றி கூறினார். (உ)

'வலிகாமம்

ஆசிரியர் பற்றுக்குறை தீர்க்க நடவடிக்கை

[சித்தன்கேணி]

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா வட்டுக்கோட்டை வடக்கொதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவுக்கு வட்டுத் தொகுதியில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு கல்வி ஆசிரியர்கள் குழுவைக் கேட்டிருப்பதாகவும் மேற்படி குழு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் எழுதியிருக்கின்றார்.

கடந்தமாதம்வட்டுத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவுக்கு 170 ஆசிரியர்கள் பற்றுக்குறைபாடு இருப்பதாகவும் இதனால்மாணவர்களுடைய கல்வி பாதிப்படைவதாகவும் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். [உ]

நீதிமன்றத்தில் நடந்தது:

முழந்தாளிட்டு இளைஞர் மன்னிப்புக்கோரினர்

[புலோலி]

திருமணமான இளம்பெண் ஒருவரை அவமதிப்பிற்குட்படுத்து முகமாக பலாத்காரம்புரிந்த இளைஞர் ஒருவர் முழந்தாளிட்டு மன்னிப்புக்கோரிய சம்பவம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

புலோலி தெற்கு வாதிபுலத்தைச்சேர்ந்த செல்வராசா என்ற இளைஞர் அப்பகுதியைச்சேர்ந்த நாகலிங்கம் நாகேஸ்வரி என்ற திருமணமான இளம்பெண்ணை மானபங்கப்படுத்த முகமாக அவர்மீது பலாத்காரம் புரிந்த தாகப் பருத்தித்துறை பொலிசார் குற்றம்சாட்டி பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

இவ்வழக்கு நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் கூப்பிடப்பட்டபோது குற்றம் இணக்கமுள்ளதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது நீதிபதி எதிரியான இளைஞன், வழக்காளியான இளம் பெண்ணை முழந்தாளிட்டு நின்று மன்னிப்புக் கோருமாறு உத்தரவிட்டதுடன் தரிமப் பணமாக 350 ரூபா செலுத்தும்படியும் உத்தரவிட்டார்

எதிரியான இளைஞர் வழக்காளியான இளம்பெண்ணை முழந்தாளிட்டு நின்று மன்னிப்புக் கோரினார். [உ]

"சமூகநலன்களில் பெண்கள் அக்கறைகொள்ளவேண்டும்"

[கரவெட்டி]

சமூகத்தில் பெண்களின் பங்கு மிகவும் முதன்மையானதாகும். பெண்கள் தமது குடும்ப நலன்களைப் பேணிப் பாதுகாப்பது—ன், சமூகத்திற்கான ஆக்கப்பணிகளையும் மேற்கொள்ள முன்வரவேண்டும். மாதர்கள் தமக்குக் கிடைக்கும் சொற்ப ஊதியத்தையும் விவேகமுறையில் செலவுசெய்வதில் கவனம் செலுத்தி குடும்பத்தின் பொருளாதாரத்தையும், சமூகத்தின் பொருளாதாரத்தையும் பெருக்கக்கூடிய சிறிய தொழில்களை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி சி. சோமசுந்தரி அரியாலை ஸ்ரீ கணேசன் சனசமூகநிலையத்தின் 34வது ஆண்டு நிறைவு விழாவில் மாதர்சங்கத்தின் "நிலையத்தில் மாதர்களின் கடமை" என்ற பொருள் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு ஆசிரியை தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் செல்வி இ. கமலினிதேவி வரவேற்புரைநிகழ்த்த செல்வி ச. தயாவதி நன்றிகூறினார். மாதர்சங்கத்தின் ஆதரவில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. [உ]

"அபிவிருத்திப் பணிகளிலும் இளைஞர்கள் பங்கேற்கவும்"

[பச்சிலைப்பள்ளி]

"நாட்டின் முதுகெலும்பாக இளைஞர்கள் விளங்கினார்கள். அவர்கள் விவசாய துறையில் வாட்டுக்கு ஏற்ப ஆர்வத்துடன், நாட்டின் அபிவிருத்திகளிலும் பங்குபற்ற வேண்டும். இதன் மூலம் கிராமங்களிலுள்ள அபிவிருத்தி இயல்களை ஏற்படுத்த முடியும்" பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயல்செயல் ஆலோசனை மாவட்டக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா பரிசளிப்புவைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட பின் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. கிட்னர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "ஒரு ஆண்டுக்கு முன் இந்தியாவிலிருந்து வந்த மருத்துவர்கள் மக்களிடையே அபிவிருத்தி இயல்களை ஏற்படுத்தி வந்தனர். அவர்கள் மக்களிடையே அபிவிருத்தி இயல்களை ஏற்படுத்த முடியும்" பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில

ஈரான் ஜனாதிபதி பதவியை ராஜினாமா செய்வார்?

தமது விருப்பத்தை அயத்தொல்லாவிடம் கூறினார்

தெஹ்ரான், ஜூன். 29 கூறினார்.

ஈரான் ஜனாதிபதி [illegible] வைத்தாம் ராஜினாமா செய்ய [illegible] விரும்புவதாக ஜனாப் மானி [illegible] சத்தர், மதத்தலைவர் அயத் தொல்லா கொமேய்னியிடம் கூறியுள்ளார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஈரானிய அரசாங்கம் தவறிவிட்டது என்றும் ஷாவின் ஆட்சிக்காலத்திற்கு நிலையிலுள்ளதை முதிர்ந்த நீதிபதிகளிடமே என்றும் மதத் தலைவர் கொமேனி நேற்று கூறியிருந்தார்.

மதத்தலைவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டபின்னர் ஈரானுக்கு சந்தித்த ஜனாதிபதி சத்தர், தாம் ராஜினாமா செய்யவிரும்புவதாகக் [illegible] ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தமையில் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறினார். ஈரானிய பாராளுமன்றம் முதலில் தமது பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வாக [illegible] வலியுறுத்தினார். (e)

42 சடலங்கள் மீட்பு!

ரோம், ஜூன். 29

8 பெருடன் கடலில் விழுந்த லிபியாவிலிருந்து வந்த விமானம் விபத்தில் பலியானவர்களில் 42 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

விமான விபத்துக்கான காரணம் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் இது ஒரு நாசவேலையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (e)

பிரான்சில் மதுவுக்கு வருடாந்தம் 40 ஆயிரம் பேர் பலியாகின்றனர்

பாரிஸ், ஜூன் 29

பிரான்சில் வருடாந்தம் 40 ஆயிரம் பேரை மது பலி கொள்கிறது என்று புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது.

அமோக தற்கொலைகளும் மதுவே காரணமாக அமைந்துவிடுகிறது என்றும் நிபுணர் குழு ஒன்று நடத்திய ஆய்வு ஒன்று அறிவிக்கிறது.

பிரான்சில் நிகழும் விபத்துக்களில் முக்கால் ஒரு பங்கு மது குடித்து விபத்துவருபவர்களினாலேயே ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் 50 வயதுக்கு மேற்பட்ட 50 வீதம் பேர் மதுவுக்கு அடிமையாகியிருக்கிறார்கள். இவர்களில் 30 வீதம் பேர் [illegible] மாகாணத்தவர்கள் என்றும் அப்புள்ளி விபரம் தெரிவிக்கிறது. (இ)

உடற்கல்வி தினம்

[மூலோலி]

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர் தர ஆரம்பக் கல்லூரியில் உடற்கல்வித்தினமும் நடாத்த இல்லங்களுக்கிடையே போட்டியும் இம்மாதம் 29 திகதி கல்லூரி விளையாட்டரங்கில் அதிபர் செல்வி ஆர். ஜே. மான் தலைமையில் நடைபெறுகின்றன.

பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நா. நாகராசாவிடமிருந்து ஏற்றி ஆரம்பித்தலுடனும், இல்லக்கொடிகளை நிறுவுதலுடனும் போட்டியிலும் வாழ். கூட்டுறவுத்தலைவர் திரு. வி. தங்கராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசுகளை திருமதி. மு. தங்கராசா வழங்குவார். (கு)

தாய்லாந்தினுள் வியட்நாம் துருப்புக்கள் ஊடுருவல்!

சீனா பலத்த கண்டனம்

பீக்கிங், ஜூன் 29

வியட்நாம் தனது துருப்புக்களை தாய்லாந்திலுள்ள மேலும் பெருந்தொகையாக அனுப்பி வருகிறது என்று சீனா எச்சரிக்கை செய்துள்ளது.

தாய்லாந்தினுள் ராணுவ ஊடுருவல் நடாத்தலாம் என்று வியட்நாம் நேற்றுவேளை விட்ட அறிக்கையில் தெரிவித்ததையும் சீனா வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

ஆசியநாடுகள் வியட்நாமிய போக்கைக் கண்டித்திருப்பது எதிர்பார்க்கப் பட்டதாகவே என்றும் நடவடிக்கை செய்திகளாக குறிப்பிட்டுள்ளன. (ர)

"கிரியின்மறைவால் பாரதம் மனிதாபிமானியை இழந்தது"

சென்னை தலைமை நீதிபதி இஸ்மயில் அனுதாபம்

[சென்னை]

அமரர் கிரியின் மறைவால் பாரதம் பெரும் தேசபக்தனை—தன்னிறைந்த அரசியல்வாதியை—இணையற்ற ராஜதந்திரியை—நறுமணிக்க நிர்வாகியை—தொழிலாளர் இயக்கத் தலைவனை, மொத்தத்தில் ஒரு பாரதம் மனிதாபிமானியை பாரதநாடு இழந்துவிட்டது.

இவ்வாறு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஜனாப் எம். எம். இஸ்மாயில் உயர்நீதிமன்றத்தில் நேற்று அமரர் கிரியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

அமரர் கிரிக்கு அஞ்சலி செலுத்துமொட்டு 91 நிமிட மௌனம் செலுத்தி பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாப் இஸ்மாயில் மேலும் கூறியதாவது:

பிரிட்டனிலிருந்து பரிஸ்டர் பட்டம் பெறுவதற்கு பெரும் சேவையாற்றிய பின்னர் விடுதலைப் போராட்டத்திலும் தொழிலாளர் போராட்டங்களிலும் ஈடுபட்டு நாடுக்கும் மக்களுக்கும் பெரு தொண்டாற்றினார். [இ]

ஷாவின் உடல் நிலை மோசம்:

எகிப்திய அதிபர் அவசரமாக நெய்ரோ திரும்பினார்!

நெய்ரோ ஜூன் 29

நெய்ரோவிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் கடும் கவனிப்பு முற்று சிகிச்சைபெற்று வரும் ஈரானிய முன்னாள் மன்னர் ஷாவைப் பார்ப்பதற்காக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இன்று அலெக்சாந்திரியாவிலிருந்து நெய்ரோ வந்து சேர்ந்தார்.

அலெக்சாந்திரியாவிலிருக்கோடைகால விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்த ஜனாதிபதி சதாத், ஷாவின் உடல்நிலை தொடர்பாக வைத்திய [illegible] யிலிருந்து கிடைத்த அறிக்கையை [illegible] தனது விடுமுறையை ரத்துச் செய்துவிட்டு அவசர அவசரமாக நெய்ரோ திரும்பியுள்ளார்.

கடும் சளிச்சுரத்தினாலும், காய்ச்சலாலும் பீடிக்கப்பட்டிருக்கும் ஷாவுக்கு பிராங்க்ஸ் எனும் நுரையீரலுக்கு மேற்பட்டு [illegible] சிகிச்சையளிப்பதற்காக அமெரிக்க வைத்திய நிபுணர் குழுவொன்று நெய்ரோ வந்து பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [கு]

ஷாவின் போக்குகளை உடன் கைவிடாதவர்களுக்கு சிறை!

அமைச்சர், ஜனாதிபதியானாலும் உடன் வெளியேற்றப்படுவர்

தெஹரான், ஜூன் 29

ஈரானிய ஷாவின் [illegible] போக்குகளை இன்னும் 10 நாட்களுக்கு [illegible] விடாத அமைச்சர்களோ, [illegible] ஜனாதிபதி [illegible] சதரேயானாலும் உடனடியாக பதவியிலிருந்து வெளியேற்றப்படுவர்.

இவ்வாறு ஈரானிய [illegible] தெஹரானிலுள்ள [illegible] கொமேய்னி [illegible] ஷாவின் போக்குகளை [illegible] மக்களும் ஜனாதிபதி மானி சதராயினும் சரி அமைச்சர்களானாலும்சரி சாதாரண குற்றவாளிகளைப்போல் [illegible] செய்யப்பட்டு சிறையில் வைக்கப்படுவர் என்றும் அயத் தொல்லா கொமேய்னி தெரிவித்துள்ளார்.

மேலும் அமைச்சர்களையும் [illegible] வொதச்சபையின் [illegible] உறுப்பினர்களையும் [illegible] உடனடியாக [illegible] [illegible] (கு)

தாய்லாந்தினுள் ராணுவ ஊடுருவல்!

[illegible] நடாத்தலாம் என்று வியட்நாம் நேற்றுவேளை [illegible] ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தமையில் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று கூறினார். ஈரானிய பாராளுமன்றம் முதலில் தமது பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வாக [illegible] வலியுறுத்தினார். (e)

பொலிசார் உணவு வழங்கினர்

[பசுமைப்பகுதி]

பொரள் பண்டிகையை முன்னிட்டு பண்டிப் பொலிசார் பணி ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களுக்கு முற்றுமே உணவு வழங்கினர்.

பண்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. சி. விஜேசூரியா மேற்படி பொலிஸ் நிலையத்தில் சாரியிக் உணவுப் பொட்டலங்களை வழங்கினார். [கு]

ஆலயத்தில் சாராயம் விற்றனராம்

[மூலைக்கு]

நேற்று நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் சாராயம் விற்றமையினால் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆலயத்தில் நடைபெற்ற சப்பறத்திருவிழாவுக்கு சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்டமையினால் சேர்த்த சிலைத் தப்பி குற்றவாளிகளாக, ஒரு இராணுவத்தினரும் ஆயுதமேந்திய [illegible] கடையில் ஈடுபட்ட உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. [illegible], காங்கேசன்துறை திரு. [illegible], திரு. [illegible] ஆகியோர் [illegible] ஆலயத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்த போது நீதிபதி திரு. ரி. கே. [illegible] சத்தியநாதன் இரு [illegible] தலா 250 ரூபா [illegible] விதித்தார். (கு)

ஆப்கானில் சோவியத் துருப்புகள் பலி!

கிளர்ச்சிக்காரர்கள் தாக்குதல்

காபூல், ஜூன். 29

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக்காரர்களுக்கும், ராணுவத் துருப்புக்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் பல ராணுவ துருப்புக்கள் பலியானார்கள்.

இதேவேளை ஆப்கானிலுள்ள சோவியத் துருப்புக்களுக்கு எதிராக காபூல் நகரில் வர்த்தகர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டம் ஊர்வலத்தைத் தொடர்ந்து அங்கு நிலவிய பதட்டநிலை இப்போது தணிந்துவிட்டதாக உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவித்தன.

வன்செயல்களைத்தொடர்ந்து மூடப்பட்ட கடைகள் யாவும் திறக்கப்பட்டுவிட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ர)

"ஸ்ரீலங்கா எழுதுவினைஞர் சங்கம்

வேறுபாடின்றி சகலருக்கும் சேவையாற்றிவருகிறது"

(கொழும்பு)

ஸ்ரீலங்கா உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்திற்கு வடக்கு மேற்கு உட்பட நாடுகளுக்கு சமை பாகங்களிலும் கிளைகள் உண்டு. ஆனால் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்திற்கு வடக்கு மேற்கு மட்டுமே கிளைகள் உண்டு. நாடுகளுக்கு வேறு எப்பகுதிகளிலும் கிளைகள் இல்லை.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க செயலாளர் கடந்த மாதம் 23ம் திகதி பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலாக ஸ்ரீலங்கா உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. டி. பி. பொத்தல கொட வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உறுப்பட்டதாவது.

உள்ளூராட்சி எழுதுவினை சங்க செயலாளர் வெளியிட்ட அறிக்கையில் எங்கள் சங்கத்திற்கு எதிராகவும் வடக்கில் எங்கள் சங்க நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் தமிழ்பேசும் பகுதிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் சங்கத்தில் சேரக் கூடாதென்றும் எங்கள் சங்கம் தமிழர்க்கு எதிரானதென்றும் குறிப்பிட்டுள்ளார். எங்கள் சங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பில் இணைந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்நாட்டை இரு தடவை ஆட்சி புரிந்துள்ளது. சுதந்திர கட்சி ஆட்சியிலிருந்த போது இந்நாட்டில் உள்ள தமிழ்பேசும் மக்கள் இன்னல்களுக்கு ஆட்டிப்படுவதாகவே வேறு எந்த குற்றங்களுக்கு விட நல்ல நிலையில் இருந்தார்கள். இதற்கு பல ஆதாரங்கள் தெரிவிக்க முடியும் ஆனால் சுதந்திரக் கட்சி தமிழருக்கு எதிரான தென்ற குற்றச்சாட்டு பிழையானதும் விஷமத்தனமானதுமாகும்.

தொழிற்சங்க கூட்டத்தின் படி சாதி சமய இன பிரதேச அடிப்படையில் தொழிற்சங்க மொன்றை உருவாக்க சட்டத்தில் சரத்துகளில் ஒரு பகுதி செய்யப்பட்ட தொழிற்சங்கம் ஒரு பொது ஸ்தாபனமாகும். சேவையில் உள்ள எந்த ஊழியரும் தங்களுக்கு சேவை செய்ய உருவாக்கப்பட்ட சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம்

ஸ்ரீலங்கா உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் உயர்ந்த தொண்டர்கள் கொண்ட ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட விதாயமாதலால் பிரதேச, சாதி, சமய இன வேறுபாடுகளற்ற உள்ளூராட்சி சேவையில் உள்ள எந்த உறுப்பினரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க செயலாளரின் கருத்துப்படி அச்சங்கம் ஒரு இன வாத எண்ணத்தைக் கொண்டிருப்பதாக கூறி ஒரு ஜனநாயக

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகலீலா (கல்லூரி)
தினமும் 6-45, 9-45
மி, ஞாயிறு 1-45
தெற்கிலிருந்து வடக்கே
ரத்தத்தின் ரத்தமே

ஜோதி (வண்ணமயம்)
தினமும் 4 காட்சிகள்
மனோரமா - ஸ்ரீவித்யா
அபூர்வ ராகங்கள்
(புதிய பிரதி)

வெலிங்டன் (வண்ணமயம்)
தினமும் 4 காட்சிகள்
12-15, 3-00 6-45 9-00
ரஜனிகாந்த்
ஆறிலிருந்து அறுபதுவரை

சிலோன் (வண்ணமயம்) மேல் ரோடு
தினமும் 4 காட்சிகள்
நேரில் தோன்றி
ஞானக்குழந்தை
பெரும்வரவைத் தமிழ்த் திரைப்படங்களில் ஒன்றாகிய
ஒருமித்த செல்வி கொண்டாடும்

125வது நாளை நோக்கி
து மலர்கிறது
லிங்கர் (வண்ணமயம்)
மேல்ரோடு: 498
தினமும் 12-00, 2-00,
4-00, 7-00
மதுரகர் : ராதிகா விஜயன் : ரதி
திறம் மாறாத பூக்கள்
(வண்ணக்கலை)

TILL 30th June Phone: 488
Manohara (நவீன)
Daily 10-30, 2-30, 4-45, 7-30, & 9-45
OPENING A WHOLE NEW WORLD OF ENTERTAINMENT
Walt Disney's
"The Living Desert"
(A True Life Adventure Feature) COLOUR
FABULOUSLY BEAUTIFUL
நாளை முதல்
அந்தரங்கம்

SANTHI JAFFNA Phone 7642
Daily 5 Shows
RIDE THE MAGIC CARPET INTO AN ARABIAN NIGHT WONDER WORLD
RODDY McDOWALL—KABIR BEDI
"THE THIEF OF BAGHDAD"
—Color— The Best-Loved Fairy Tale of all time Re-created once again for the entire family
விரதிரட் செயல்கள், வாட்போர், குதிரை ஓட்டங்கள் மந்திரஜாலங்கள், பறக்கும் சம்பவம் யாவையும் குரு குரு வர்ணத்தில் முழுக் குடும்பமும் கண்டு களியுங்கள்.

மகத்தான 9-வது வாரம்
ராணி (வண்ணமயம்)
தினமும் 6 காட்சிகள்
மேல்ரோடு (இருவேடங்களில்) ✦ ஸ்ரீதேவி
கல்யாண ராமன் (வண்ண)

ஸ்ரீதர் கடைசி வாரம்
(வண்ணமயம்)
தினமும் 6 காட்சிகள்
ஞானஒளி

COMING SOON
Exorcist II - TheHeretic
Day of the Animals

ராஜா (வண்ணமயம்)
தினமும் 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயசித்ரா - ரங்கராவ்
நடித்த
அன்புச் சகோதரர்கள்
(புதிய பிரதி)

இன்றைய பலன்

கலி மாதம் 16 உ திதி
(திங்கட்கிழமை)
(30-6-1980)

மேடம்: வாணாள் சொந்தவாரர்களுக்கு வருமானம் மிகுதியாகும். ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும். மாணவர்கள் ஆராய்ச்சிகளிலும் நூல்கள் பிரசுரம் பொன்னுமாகும்.

இடபம்: வாணம் பாடிபோக்கு வரவு இயல்பு வாழ்வினும் ஒரு விரும் முதியவர் ஒருவர் மனக்கு நல்வழிகாட்டுவார்.

மிதுனம்: மூன்றாம் நாள் பாதியில் நடைபெறும் பல தரர்கள் இருந்த பட்டிருந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்துவந்து வேதனையைத் தரும் கடமையில் கவனம் செலுத்தவும்.

கடகம்: வாரநாளும் வேண்டும் பெற்றிப் பாதையில் வீரு நடைபோடுவீர்கள் கனவிலிருந்து சுதந்திரம் இடமுண்டு காதலர்களுக்கு இனிப்பானதினம்.

சிங்கம்: தொழிற்துறையில் எதிர்பாராத நஷ்டத்துக்கு இடமுண்டு புதிய முயற்சியில் பின்போடவும் உடற்நலத்துக்கு பேணி நடக்கவும்.

கன்னி: இதமான வாழ்க்கை சொந்த பெரியோர்கள் ஆதரவு இருக்கவும் இன்று நற்பயனும் கிட்டும். இறை பக்தி மேலோங்கும்.

துலா: ஓய்வையும் உல்லாசத்தையும் விரும்புவீர்கள் தொழிற்துறையில் விரைவில் நன்மாற்றம் ஏற்படலாம் இன்று பொன்னுமதினம் வாழ்க்கையில் மகிழ்ச்சிகூடும்.

விருச்சிகம்: விருந்துபசாரங்களில் கலந்து உற்றாரைக் கவர்வீர்கள் பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும் எதிர்கால வருமானம் மகிழ்ச்சி உயரும் பொன்னுமு.

தனுசு: வேண்டாத உறவுகளை துண்டித்தல் நன்று வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். பெரியோர்களை மதித்துக்கொள்வது பொருளாதாரம் பேணி நடக்கவும்.

மகரம்: குடும்பத்தில் சோதனைகள் உருவாகும் நிலவுகிறபடியினும் இடமுண்டு கடமையிலும் தடைகள் தோன்றும்.

கும்பம்: இல்லறவாழ்க்கையுக்கு சிறப்பான தினம் பொருளாக வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு நீண்ட நாள் கடன் தொல்லை இன்று தீர்க்கப்படுவதற்குக் இடமுண்டு.

மீனம்: சித்தப்பாவுக்கு நாள் கடத்தாமல் என்னங்கள் நிகழலாம் சகோதரவழி பாசம் சுமுகப்படுகிறது செய்திகள் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

விபுலானந்தர் சமாதிக்கு அஞ்சலி

[கட்டக்களப்பு]

[illegible] டக்களப்பிற்கு வருகை தந்திருந்த தமிழக அறிஞர் சுவாமி தன்மயானந்தஜி, பேராசிரியர் மாணவர் பிரமணியம் ஆகியோர் கல்லடியிலுள்ள விபுலானந்தரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

[illegible]வதற்கு சுவாமி தியானந்தஜி, இலங்கை விவேகானந்தர் கழகப்பிரசுரகர்த்தா திரு. வித்தகுமார் ஆகியோரும் வந்திருந்தனர். (ம)

வெல்லி (வண்ணமயம்)
தினமும் 3-30, 5-15
7-00, ஞாயிறு 5-15
மேல்ரோடு
ஸ்ரீதேவி

மானிப் ராய் இலங்கை வங்கி நாளை மீண்டும் திறக்கப்படும்

(உமா [illegible])

இலங்கை வங்கியி மானிப் [illegible] மீண்டு திறக்கப்படவுள்ளது.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி காலை [illegible] மூடப்பட்ட வங்கி மீண்டு [illegible] செல்லாய் [illegible] திறக்கப்படவுள்ளது. [illegible] ஆகியவை [illegible] வங்கி வளாகத்தில் [illegible] மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி மானிப்பாய் பட்டினசபை [illegible] பகுதியில் இயங்கவுள்ளது. இவ்வங்கியில் வங்கியின் சாவி [illegible] அதிபர் [illegible] நடைபெறும். (ஈ-ரு)

'ஒருதொகுதியில் மட்டும் 720 ஆசிரியர் நியமனம்''

வவுனியா எம் பி. தகவல்

(புனியன்குளம்)

"இந்த அரசில் முன்று வருட ஆட்சிக்காலத்தில் தென் இலங்கையிலுள்ள ஒரு தொகுதியில் மாத்திரம் 720 ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள்" என்று சென்ற பூவரசங்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய இல்லத்திறப்பு விழாவில் வவுனியா போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. நா. கதிரைப்பரம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது:

"வவுனியா, முல்லைத்தீவு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 520 ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ளது. ஆனால் 19 ஆசிரிய நியமனங்களைக் கிடைத்தது. அந்த 19 பிரமாவட்டங்களிலிருந்து 82 ஆசிரியர்களும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் ஏனைய ஆசிரியர்கள் வேறு பகுதிகளில் இதுவரை நிரப்பப்படவில்லை. இதனால் எமது பகுதி தொடர்ந்து பின்தங்கிய மாவட்டமாக இருந்து வருகின்றது.

இங்கே போக்குவரத்துக்கு எனது தொகுதியிலுள்ள படித்த தமிழ், தங்களைத் ஒன்றாகி காலம் இவை மாகக் கறியிக்கத் தயாராகவுள்ளார்கள். அதற்கு அரசினர் அனுமதியளித்தால் கல்விப்பகுதியில் கல்வியை ஐந்தாண்டு காலத்திற் முன்னேற்றிக் காட்டுவேன். இதன் ஒரு பட்டமாக எனது தொகுதியில் கேண் வகுப்பில் பதிவு செய்த க. பொ. த. உயர்தர வகுப்புச் [illegible] கொடுத்த ஏனை இரு பாலாரையும் தனியாகவிடாமல் பாடசாலைகளுக்கு உபகாரச் சம்பளம் பெறும் ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க மேற்கொண்டு வருகின்றேன்."

"நான் 1960-ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது 63 ஆரம்ப பாடசாலைகளை மாத்திரம் கொண்ட மாவட்டமாக உருவாக்கினேன். அன்று தொடங்கி ஆரம்பித்த எனது சேவைப் பணியை இன்றும் தொடர்ந்து செய்து வருகின்றேன். எனது ஒருவரை வன்னி மாவட்டம் இவ்விடத்தே கேண் எனது வன்னி மாவட்டத்திலிருந்து வெளியேறி வெளிப்பதிலும் மாகாண பரவியிருக்கும் பாடசாலை வளர்ச்சிக்கு வேர்ச்சியுமாகப் பயன்பட்டு வருகின்றது. நான் இப்பகுதிக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன்

போட்டியில் நமது [illegible] ஆகக் கடமையாற்றிய [illegible] ஓய்வு [illegible] அதிகாரி திரு. வி. கே. நடராஜாவையும் புனர்வாழ்வு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கணபதிப்பிள்ளையையும் வெகு வாகப் பாராட்டுகின்றேன்.

இறுதியாக பாடசாலை அதிபர் திரு. க. சோமாவையும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கணபதிப்பிள்ளையும் பேசினார்கள் (ச)

ஸ்ரெதஸ்...

5-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்படுகிறார்கள் அவைத்து நிறப்பாகப் பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் வைத்தியர்கள் எல்லாரும் வேட்டிசாரிவையுடன் கடிய ஒரு கருவியும் மாத்தாலான மருந்துப்பேட்டி ஒன்றுமே கொண்டு [illegible] நிரும் குலுட்டாக்டர் [illegible] சாதிசட்டை சேர்ட்டுடனும், ஸ்ரெதஸ்கோப்புடனும் கம்பீரமாகவே காட்சி தருவார்.

டாக்டர் சண்முகரெத்தினம் இந்தியாவில் தான் கற்ற கல்வியைக்கொண்டு தமிழ் வைத்தியத்தினும், ஆங்கிலவைத்தியத்தினும் உள்ள இரு ஒற்றுமையை தமது வைத்திய முறையில் புகுத்தினார். இதனால் அவரது புகழ் பரவத் தொடங்கியது. [illegible] அவரது வைத்திய நிலையத்தில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் தாய்மார் குழுமியிருப்பதை அந்த வாரலாம்.

நவீன முறைகளை தமதுவைத்தியத்தையில் அவர் புகுத்திய போதிலும் தமது பரம்பரையாக வழங்கப்பட்டு வந்த [illegible] அவர் தொடர்ந்து கையாண்டார்.

மாத்தளையில் [illegible] விடியுடுத்த [illegible] வெளி நாடு [illegible] பணமும் கட்டி [illegible] வந்து சேர்வதற்கு முன்னரே அவர் திடீரென மறைந்தது எமது வைத்தியத் துறைக்கு சேர்க்கமுடியாத இழப்பாகும்.

[illegible] பிற்கு [illegible] செல்லு போன்றவற்றுடனே மாரடைப்பு நோயினால் அவர் [illegible] டாக்டர் சண்முகரெத்தினத்தை அவருடன் கடமை பிரயாணம் செய்த [illegible] நவீன் ஜி ஜி பொன்னம்பலம் அவர் [illegible] தமையனார் தங்காராஜ் [illegible] சேர்ப்பித்தார். [illegible] அவர் காலமானார்.

டாக்டர் [illegible] பின்னர் காலம் [illegible] [illegible] [illegible]

புதிய பதிப்பு வெளிவந்துவிட்டது!
புதிய கணிதம் பயிற்சி
7-ஆம் வகுப்பு
விளக்கமும்-விடைகளும்
விலை: 7-75
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
EELANAADU

இளைஞர் கைது

[யாழ்ப்பாணம்] பண்டிலிப் பிராமண இளைஞனின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின்மீது 17 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில், புலோப்பளை என்னுமிடத்தில் வசித்து வந்த சாம்பசிவசர்மாவுக்கு பாலசர்மா [17 வயது] என்பவர், தனது கடையில் வைத்துக் குத்தப்பட்டு மரணமானார். இம் மரணம் சம்பந்தமாக பொலிசார் மூவரைத் தேடி வலைவிரித்தபோது அருளானந்தம் என்பவரை பொலிசார் சந்தேகத்தின்மீது கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். [கொ]

பரித் நஸீர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முடிசிக்கலை இடுப்பிலிருந்து மிருந்து கடந்த ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணம் சென்றிருந்து அதற்குள் படிகி வருகிறார். புலவன், இரகசிய புலவன், முக்கோப்புலவன், செட்டிநாவன், மலைநாவன், கருநாவன் பார்த்தால், ஆகிய 20 கொடிய விஷ முள்ள பாம்புகளை எளர்த்து வருகிறார். இப்பாம்புகளுடன் அவர் 5 தினங்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து புதிய சாதனையை நிகழ்நட்ட முயற்சிப்பார்.

எதியோப்பியாவைச் சேர்ந்த யூசுப்தாவுத் என்பவர் 16 பாம்புகளுடன் 39 மணித்தியாலங்களும், லிபோரியாவைச் சேர்ந்த ஜோப் என்பவர் 15 பாம்புகளுடன் 16 மணி நேரம், இருந்து சாதனையை நிலைநாட்டியுள்ளார். இச்சாதனையை இச்சாதனையே முறியடித்து புதிய சாதனை நிலைநாட்டவே ஜனாப் பரித் நஸீர் முயற்சிக்கிறார். [கொ]

மக்களுக்கு...

"நட்புறவு ஏற்படட..."

"நல்லெண்ணக்குழு! பொலிசாரின் கஷ்டங்களைப் பொதுமக்களுக்கும்! பொதுமக்களின் தேவைகளையும் கஷ்டங்களையும் பொலிசாருக்கும் எடுத்துக்கூறி, விளங்கிக்கொள்ளும் பொதுமக்களைப் பொலிசாருடன் ஒன்று சேர்த்து பொலிஸ் பொதுமக்கள் நட்புறவும் நெருங்கிய அமைப்பு விதிகள் வகுத்துக்காட்டப்பட்டு சமூகப் பரிமாறல் களும் இடம்பெற்றன. ஒவ்வொரு பொலிஸ்நிலையங்களிலும் இதுபோன்ற நெருங்கிய அமைப்பு தொடர்பும் தீர்மானிக்கப்பட்டது.

"பொலிசாரிடம் காணப்படும் குறைபாடுகள்"

திரு. கிஷ்லி விக்கிரமசூரியா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பொலிசாரிடம் பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவர்கள் செய்யும் குற்றங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் அவர்கள் செய்யும் குற்றங்களை பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடிகளாகப் பொதுமக்கள் இருக்கிறார்கள். அந்தப் பொதுமக்கள் பொலிசாரின் தவறுகளை எடுத்துக்காட்ட வேண்டும். அதற்கு பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவும் சகிப்பு மனப்பாங்கு வேண்டும். பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவின் மூலம்தான் பொலிசார் பொதுமக்களுக்கு நல்ல சேவையாற்றமுடியும்.

மருதனாமடம் சம்பவம்

"மருதனாமடம் பெட்ரோல் நிலையப் பணத்தை எடுத்துச் சென்றபோது பாதுகாப்பின்றி பணத்தை எடுத்துச் சென்றதாலேயே அச்சொல்லொணாத நடைபெற்றது. அவரைப் பழிவாங்க வேண்டும் என எண்ணிக்கொண்ட ஒரு கோஷ்டியே இச் சொல்லொணாத நடவடிக்கையில் ஈடுபட்டது. பணத்தைத் உரிமையாளர் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் வைக்கிறார் பணத்தை வசிக்கும் கொண்டு செல்வதை யாவரும் அறிவர். பணத்தை வங்கிக்கு எடுத்துச் செல்பவர்கள் பாதுகாப்புடன் நாளையும், நேரத்தையும் மாற்றிக் கொண்டு செல்வதால் திருட்டுக்களைத் தடுக்க முடியும். இன்று ஆரம்பிக்கப்படும் பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுக்குழு இவற்றைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறி, பொதுமக்களைப் பாதுகாப்புடன் வாழ வழிவகுத்துக் கொடுக்க வேண்டும் (கொ)

மொலிஸ்நிலையம் வர அஞ்சுகின்றனர்

"பொலிஸார் பொதுமக்களுடன் நல்லமுறையில் நடப்பதில்லை. இதன்காரணமாக பொதுமக்கள் பொலிஸ் நிலையத்திற்கு வரவே அஞ்சுகின்றார்கள் தாங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும்போதுதான் பொலிஸ்நிலையத்திற்கு வருகிறார்கள். அந்த நிலை மாறவேண்டும். பொதுமக்கள் பீதியை விட்டும் பொலிஸ் நிலையங்களுக்கு வரவேண்டும். அவர்களைப் பொலிசார் நல்ல முறையில் வரவேற்று அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும்

"திருட்டுக் குற்றம் அதிகரித்துவருகின்றன. திருட்டுச் சம்பவங்கள் கடுமையாகக் கொலைகளிலேயே முடிவடைகின்றன. கொலைகளுக்குச் செல்லும் பெண்கள் உடல் முழுவதும் தங்கநகைகளை அணிந்து செல்லுகிறார்கள். அதே போல் தங்கள் குழந்தைகளுக்கும் அணிந்து தூக்கிச் செல்லுகிறார்கள். நல்லவளாகவும் ஒருவன்கூட இவர்கள் அணிந்துவரும் நகைகள் திருடனை மாற்றிவிடுகிறது. இவ்வாறு நகைகளை அணிந்து செல்பவர்கள் அதைக் குறைக்க வேண்டும் அல்லது பொறுப்பு பாதுகாப்புடன் செல்ல வேண்டும்.

ஐக்கியம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், கூடவிருக்கு சொந்தக் கட்டிடங்கள் அமைப்பதற்காக நிதிசேகரிப்பது பற்றியும் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகள் பற்றியும், அது தொடர்பாகத் தமிழர்விடுதலைக்கூட்டணி எடுத்த நடவடிக்கைகள் முடிவுகள் பற்றியும், திரு. அமிர்தலிங்கம் இக் கூட்டத்தில் விளக்கிக் கூறினார். இவரின் கருத்துக்கள் கூட்டத்திலிருந்தோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பு விதிகளை மாற்றம் செய்வது பற்றியும், இக்கூட்டத்தில் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டது

சேனாதிராசா எம் பி. திரு. இ. சதிரவேற்பிள்ளை உபேட மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்

[வெ]

எல்லையில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மைப்பதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் மேற்கொண்டிருந்தார்.

ஆப்பானிஸ்தானில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான ஏழாவது மேற்கைச் சேர்ந்த நம் திருச்செல்வம், திருநெல்வேலி பிறக்கைச்சேர்ந்த ரி. கமலநாதன் ஆகிய இவ்விருவரும் மைத்துனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

மரண அறிவித்தல்

திருமதி இராசம்மா தில்லையம்பலம்

வலந்தலை, காரைநகர் திருமதி இராசம்மா தில்லையம்பலம் காலமானார். இவர் அமரர் தில்லையம்பலத்தின் மனைவியும், சிவசம்பு (அரசாங்க அச்சகம், கொழும்பு), தேவராசா (இ போ. ச., உப்பு வெளி) விசுவலிங்கம் (ஆசிரியர், புனிதஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் - முன்னாள் ஆசிரியர், புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு), தருமலிங்கம் (சசிகலா ஸ்ரோர்ஸ், நாவலப்பிட்டி), நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இரர்ஜேஸ்வரி, ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேசன் (பொறியியலாளர்), திருவாதிரை (திருப்பதி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), கணேசமூர்த்தி (திருப்பதி ஏஜன்சி கொழும்பு), திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம், திருமதி சிவசம்பு, ஞானம்பிகை, இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (30-6-80) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அராலி தெற்கு, வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

மரண அறிவித்தல்

சிவசுப்பிரமணியம் சாந்திநிகேதன்

கோவிலாக்கண்டி சிவசுப்பிரமணியம் சாந்திநிகேதன் அகால மரணமடைந்துவிட்டார். இவர் சென்ஜோன்ஸ்கல்லூரி ஆசிரியர் சிவசுப்பிரமணியத்தினதும், மனோரஞ்சிதத்தினதும் அருமை மகனும், கௌரிதேவி பத்மநாதன் பாலகேதீஸ்வரன் (ஓமான்) சாவித்திரிதேவி (ஆசிரிய, அடம்பன் மகாவித்தியாலயம்) நமயந்திதேவி, தளாயினிதேவி (பொலிரெக்னிக், யாழ்ப்பாணம்), சந்திரமௌலீசன் (துர்க்காதேவி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சாயிலக்குமி (சுண்டிக்குளி மகளிர் பாடசாலை மாணவி) ஆகியோரது அன்புச் சகோதரனும், நடராசா பத்மநாதன் (மே. ஜெர்மனி) அவர்களது அன்புமைத்துனரும், அதிசயசொரூபியின் ஆசைமாமனும், தாமோதரம்பிள்ளை பரிமளத்தின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நல்லூர், நாயன்மார்கட்டு 'எபநேசன்' இல்லத்திலிருந்து 30-6-80 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவாக வேண்டப்படுகின்றனர்.

தகவல்: வே. சிவசுப்பிரமணியம்,
'எபநேசன்'
நாயன்மார்கட்டு, நல்லூர். 6177

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை லிமிட்டெட்

உங்கள்
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பாரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போர்ட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகில் எப்பகுதிக்கும் விமான டிக்கெட், மற்றவைகள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) மிட்.,
தபால் பெட்டி இல: 92
8, மருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!!

ஈழநாடு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the Vavuniya Post Office. Sri Lanka Regn. No CE/2048/78. The Eelanadu Post Box No 49, Telegrams: "Eelanadu" Phone: 333.

Digitized by Noolaham Foundation
www.noolaham.org | aavanaham.org